*12*

# காரியத்தின் கடைத் தொகையைக் கேளுங்கள்

## (பிரசங்கி 11; 12)

*இப்பொழுது நாம், சாலொமோனின் கண்டறிதல்களை, சாலொமோனின் உற்றுக் கவனித்தல்கள் மற்றும் பரீட்சைகள் ஆகியவற்றின் தொகுப்பை ஆழ்ந்து சிந்திக்கத் தயாராய் இருக்கின்றோம். அவர் - பரீட்சித்துப் பார்த்து தவறுதல் மேலும் ஞானம் மற்றும் அனுபவம் ஆகியவற்றினால் - ஒவ்வொன்றையும் சோதித்துப் பார்த்து, எது முக்கியமானது எது முக்கியமற்றது என்று கற்றறிந்தார்.*

*அவர் முறைப்படியாக, ஏறக்குறைய அறிவியல்ரீதியாக, சந்தோஷத்தை ஆராயத் தலைப்பட்டார். வாழ்வு அவருக்குக் குறைந்துகொண்டு வரும்போது, அவர் தமது கண்டறிதல்களை வெளிப்படுத்துவதற்காக, இந்த ஆய்வறிக்கையைத் தயாரித்தார். சாலொமோனின் காலத்தில் இருந்து ஆயிரக்கணக்கான மக்கள் இதேபோன்ற ஆய்வுகளை நடத்திப்பார்த்து, இதேவகையான முடிவுகளை அடைந்தனர் - ஆனால் அவற்றில் எதுவும் இவற்றைப்போல் நன்கு தோற்றுவிக்கப்பட்டதாகவோ அல்லது ஏவுதல் நிறைந்ததாகவோ இருந்ததில்லை. சாலொமோனின் வார்த்தைகள் காலத்தைக் கடந்து நிற்கின்றன. உலகமானது இன்னும் ஒரு பத்து இலட்சம் ஆண்டுகளுக்குத் தொடர்ந்து இருக்கும் என்றால், அவரது செய்தியானது தொடக்கத்தில் இருந்ததுபோலவே உண்மையும் பயன் நிறைந்ததுமாக நிலைத்திருக்கும்.*

*பிரசங்கி 11 மற்றும் 12 ஆகிய அதிகாரங்கள், வாழ்வின் கேள்விகளுக்கான பதில்கள் தேவனுக்குள் கண்டறியப்படுகின்றன என்பதை சந்தேகத்திற்கு இடமின்றி வெளிப்படுத்துகின்றன. பூமியும் அதின் நிறைவும் கர்த்தருடையது (சங். 24:1). நாம் யாவரும் தேவனுடைய படைப்பாக இருக்கின்றோம். நாம் ஏன் இங்கு இருக்கின்றோம் என்று அறிந்து கொள்வதற்கு நாம் விரும்பினால், உரிமையாளரின் கையேடாகிய வேதாகமத்தையே நாம் கலந்து ஆலோசிக்க வேண்டும்.*

### *தேவன்மீது நம்பிக்கை வையுங்கள் (11:1-6)*

*அதிகாரம் 11, "உன் ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடு, அநேக நாட்களுக்குப் பின்பு அதின் பலனைக் காண்பாய்" என்று தொடங்குகிறது.*

ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடுதல் என்பது கருத்தறிவு அற்றதாகக் காணப்படுகிறது. அது ஒரு சில விநாடிகள் மாத்திரமே மிதக்கிறது, பின்பு எப்போதைக்குமாக மறைந்து விடுகிறது. ஆகாரத்தைத் தண்ணீர்கள்மேல் போடுதல் என்பது என்ன நன்மையைச் செய்யக்கூடும்? அது சாலொமோன் சுருக்கமாக விவரிக்கும் கருத்தாக உள்ளது - அதாவது, சில நற்செயல்களைச் செய்வதற்குக் காரணம் எதுவும் இல்லை என்பதுபோல் அவைகள் பயனற்றவைகளாகக் காணப்படுகின்றன. நாம் செய்கின்றவற்றின் விளைவு களை நாம் எப்போதுமே காணமுடிவதில்லை. நமது செய்கைகளைத் தேவன் எவ்வாறு பயன்படுத்துவார் என்று நாம் அறியாதிருக்கின்றபடியால், நாம் விளைவுகளை அளவிட இயலாதவர்களாய் இருக்கின்றோம். தேவன் எவ்வாறு கிரியை செய்கின்றார் என்று நம்மால் புரிந்துகொள்ள இயலாது. பவுல், "நான் நட்டேன், அப்பொல்லோ நீர்ப்பாய்ச்சினான், தேவனே விளையச்செய்தார்" என்று கூறினார் (1 கொரி. 3:6). நாம் தேவனுக்காக ஊழியத்தைச் செய்துகொண்டிருந்தால், அது பயனற்றதாகக் காணப் பட்டாலும், முடிவில் நாம் பலன்களை அறுவடை செய்வோம்.

அடுத்ததாக நாம், "ஏழுபேருக்கும் எட்டுபேருக்கும் பங்கிட்டுக்கொடு, பூமியின்மேல் என்ன ஆபத்து நேரிடுமோ உனக்குத் தெரியாது" என்ற அறிவுரையைக் காணுகின்றோம் (11:2). "ஏழு" மற்றும் "எட்டு" என்ற எண்ணிக்கைகள் "எவ்வளவு பேருக்கு முடியுமோ அவ்வளவு பேருக்கு" என்று அர்த்தப்படுத்தும் எண்ணிக்கையைச் சுட்டிகாண்பிக்கப் பயன் படுத்தப் படுகிறது. நம்மால் இயன்ற அளவுக்கு நாம் நன்மை செய்ய வேண்டும், ஏனென்றால் நமக்கு நாமே உதவிசெய்துகொள்ளும் அவசியம் எப்போது ஏற்படும் என்று நாம் அறியாதிருக்கின்றோம். இயற்கையின் ஓட்டத்தை நம்மால் மாற்ற இயலாது. மேகங்கள் நிறைந்திருந்தால் மழை யைப் பொழியும் (11:3). ஒரு மரம் எங்கே விழும் என்று நமக்குத் தெரியாது. அதை மின்னல் தாக்கலாம் அல்லது காற்று அதை வேருடன் பிடுங்கிப் போடலாம். அது எங்கே விழுந்தாலும், அங்கேயே கிடக்கும் (11:3). நாம் கட்டுப்பாடு செலுத்த இயலாத இயற்கை நிகழ்வுகள் நம்மில் எவரையும் எந்த வேளையிலும் தேவையில் வைக்கக்கூடும்.

இந்த எண்ணப்போக்குதான் ஆதிகிறிஸ்தவர்கள் தங்கள் உடைமை களை விற்று, தேவையில் உள்ளவர்களுக்குப் பகிர்ந்தளிக்கத் தக்கதாக அவற்றை அப்போஸ்தலர்களிடம் கையளிக்கத் தூண்டிற்று (அப். 2:44, 45; 4:32-37). கொடுத்தவர்களுக்குத் தேவை ஏற்பட்டது என்றால் அவர்களுக்கு மற்றவர்கள் உதவுவார்கள். இது தேவனுடைய ஆயுள்காப்பீட்டுத் திட்டமாக உள்ளது.

இயற்கை விதியின்மீது அதிகமான நம்பிக்கை வைப்பவர்கள் எந்த ஒரு விஷயத்தையும் ஒருக்காலும் செய்து முடிக்க மாட்டார்கள். நாம் காற்றின் மீது அதிக கவனத்தைச் செலுத்தினால், நாம் விதைகளை விதைக்க மாட்டோம். மேகங்கள் கூடியிருந்தால், நாம் மழைக்குப் பயந்து, அறுவடை செய்ய வேண்டாம் என்று முடிவு செய்துவிடுவோம். இயற்கையின் எதிர் சூழல்களைக் கவனியாது விடுதல் என்பது மதியீனமானதாக இருக்கும், ஆனால் கடினமான சூழ்நிலைகள் பற்றி அதிகமாக அக்கறை கொள்ளுதல்

*என்பது, ஏதொன்றையும் செய்து முடிப்பதில் நம்மை ஊக்கம் இழக்கச் செய்துவிடும்.*

*வாழ்வில் நடக்கிற யாவற்றையும் நம்மால் புரிந்துகொள்ள இயலாது (11:5). மனிதனுடைய ஆவியின் வழி இன்னதென்றோ அல்லது குழந்தை பிறப்பதற்கு முன் அதன் தாயின் வயிற்றிற்குள் அந்தக் குழந்தையின் எலும்புகள் உருவாகும் விதம் இன்னதென்றும் நாம் அறிவதில்லை. அதுபோலவே, இவற்றை ஏற்படுத்துகிற தேவனுடைய கிரியைகளையும் நாம் புரிந்துகொள்ள முடியாது. நாம் நமது புரிந்துகொள்ளுதலில் உள்ள குறைபாடு நமது ஊழியத்தைத் தடைசெய்ய அனுமதிக்க முடியாது.*

*நாம் தேவன்மீது நம்பிக்கையாய் இருந்து தொடர்ந்து உழைக்க வேண்டும். நாம் காலையில் தொடங்கி மாலைவரையிலும் ஊக்கமாய் உழைக்க வேண்டும். எது மிகவும் உற்பத்தித்திறன் உள்ளதாக இருக்கும் என்பதை நாம் ஒருக்காலும் அறிவதில்லை. அது நமது முயற்சிகளைத் தேவன் எப்படி ஆசீர்வதிக்கின்றார் என்பதைப் பொறுத்ததாக உள்ளது. மாலையில் விதைக்கும் விதையானது காலையில் விதைக்கும் விதையைப் போலவே உற்பத்தித்திறன் உள்ளதாக இருக்கிறது (11:6).*

## *இன்று கர்த்தருக்குள் களிகூருங்கள் (11:7-10)*

*வாழ்வை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பது அற்புதம் நிறைந்ததாக உள்ளது (11:7, 8). "சூரியனைக் காண்பது" என்ற சொற்றொடரானது பொதுவாக, "வாழ்வை மகிழ்வுடன் அனுபவித்தல்" என்று அர்த்தப்படும்படி எடுத்துக் கொள்ளப்படுகிறது. மீண்டும் மீண்டுமாக சாலொமோன், வாழ் நாள் காலத்தை "சூரியனுக்குக் கீழே" உள்ள நாட்கள் என்று குறிப்பிட்டார். கண்கள் வெளிச்சத்தைக் காணக்கூடிய நாட்கள் என்பவை பூமியின்மீது வாழ்வின் நாட்களாக உள்ளன. இது, "உயிர்வாழ்தல் என்பது மாபெரும் விஷயம்" என்பதைக் கூறுவதற்கு சாலொமோன் கையாண்ட வழியாக இருந்தது.*

*வசனம் 8ல், நாம் வாழமுடிகின்ற வரையிலும், ஒவ்வொரு நாளிலும் அகமகிழவேண்டும் என்று நமக்குக் கூறப்படுகிறது. அது நம்மை, நாம் ஒருநாளில் இறந்துபோவோம் என்பதை நினைப்போம் என்றால், நமது வாழ்வில் இருந்து பெரும்பான்மையானவற்றைப் பெற்றுக்கொள்ள ஊக்குவிக்கும். "அந்தகாரத்தின் நாட்கள்" என்பது அனேகமாக, கல்லறையில் இருக்கும் நாட்களைக் குறிக்கலாம் (9:10). நித்தியம் என்பது இங்குள்ள வாழ்வுடன் ஒப்பிடுகையில் நீண்டதாக உள்ளது. கல்லறையை மனிதனின் "நித்திய வீடு" என்று 12:5ல் சாலொமோன் குறிப்பிட்டார். நாம் இறந்து போவோம் என்று உணர்ந்து அறிதலானது நமது வாழ்வினை முழுமையாக வாழும்படிக்கு நம்மைத் தூண்டவேண்டும். இது நாம் எப்படி மரிப்பது என்பதைக் கற்றிராத வரையிலும் எப்படி வாழ்வது என்பதை உண்மையில் அறிவது இல்லை என்பதை மறுபடியும் வலியுறுத்துகிறது.*

*அடுத்ததாக நாம், "வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்" என்று*

*வாசிக்கின்றோம் (11:9). சாலொமோன், "நீ இளைஞனாய் இருப்பதற்குச் சந்தோஷப்படு. நீ உன் வாழ்வை மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டுமென்று தேவன் விரும்புகின்றார். மகிழ்ச்சி பொங்கும் இருதயத்தைக் கொண்டிரு. உன்னைச் சுற்றிலுமுள்ள நல்ல விஷயங்களுக்கு உன் கண்களைத் திறந்துகொள், ஆனால் பாவம் நிறைந்த சந்தோஷமே மகிழ்வு நிறைந்த தன்மைக்கு வழியாக உள்ளது என்று நம்பி வஞ்சிக்கப்பட்டுவிடாதே. உன் செயல்கள் யாவற்றிற்கும் நீ தேவனிடத்தில் கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பதைச் சிந்தையில் வைத்துக்கொள்" என்று கூறினார்.*

*வாழ்வில் சந்தோஷத்தைக் கண்டறிதல் என்பது பாவத்தின் சந்தோஷத்தில் உள்ளக்களிப்படைதல் என்பதாக அர்த்தப்படுவதில்லை (எபி. 11:25). மகிழ்ச்சியான வாழ்வினால் நாம் நமது இருதயங்களில் இருந்து வருத்தத்தை நீக்கிப்போட வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார். மேலும் அவர், நமது மாம்சத்தில் இருந்து தீமையை எடுத்துப்போட்டுவிட வேண்டும் என்றும் விரும்புகின்றார். சந்தோஷமாக வாழுதல் என்பது நீதியுள்ள வாழ்வாக உள்ளது. பாவத்தின் சந்தோஷங்களில் ஈடுபட்டுக்கொண்டே சந்தோஷமாக வாழ முயற்சி செய்தல் என்பது பயனற்றதாக உள்ளது.*

## நீ வாலிபனாக இருக்கும்போதே தேவனை நினை *(12:1-8)*

*நமது முதிர்வயதின் நாட்களுக்கு முன்பாகவே தேவனைக் கனப்படுத்துவதை நாம் தொடங்கினால், அதை நாம் மிகச் சிறப்பாகச் செய்ய முடியும். சாலொமோன், "நீ உன் வாலிபப்பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை, தீங்குநாட்கள் வராததற்குமுன்னும், எனக்குப் பிரியமானவைகளல்ல என்று நீ சொல்லும் வருஷங்கள் சேராததற்குமுன்னும், ..." என்று கூறினார் (12:1, 7). முதிர்வயதில் - அதிலும் தேவனின்றி - வாழ்வை மகிழ்வுடன் அனுபவித்தல் என்பது கடினமானதாக உள்ளது. தேவனின்றி முதிர்வயதாகிவிடுகின்றவர்கள் அவரின்றியே மரித்துப் போகின்றனர். முதிர்வயது வரை தள்ளிப்போட்டால், தேவனிடத்தில் திரும்புதல் என்பது அதிகம் கடினமாகிவிடுகிறது. ஒரு நபர் முதிர்வயதாகின்றபோது, அவர் கிறிஸ்துவினிடத்தில் திரும்புவது மிகவும் குறைவானதாகிறது என்பதைப் புள்ளியியல் விபரங்கள் காண்பிக்கின்றன. உலகம் முழுவதிலும், சுவிசேஷம் பிரசங்கிக்கப்படும் இடங்களில் எல்லாம், இளம் மக்களே அதிகம் பதில் செயல் செய்பவர்களாய் இருக்கின்றனர்.*

*மக்கள் தங்கள் முதிர்வயதில் தேவனிடத்தில் திரும்புதல் என்பது ஏன் வாய்ப்புக் குறைவுள்ளதாக இருக்கிறது? வயதாவதின் விளைவுகள் பற்றிய ஒப்புவமைகளின் வரிசையொன்றை நாம் வசனம் 2முதல் 7வரை உள்ள பகுதியில் காணுகின்றோம்:*

> *சூரியனும், வெளிச்சமும், சந்திரனும், நட்சத்திரங்களும், அந்தகாரப்படாததற்குமுன்னும், மழைக்குப்பின் மேகங்கள் திரும்பத் திரும்ப வராததற்குமுன்னும், வீட்டுக் காவலாளிகள் தள்ளாடி, பெலசாலிகள்*

> கூனிப்போய், எந்திரம் அரைக்கிறவர்கள் கொஞ்சமானதினால் ஓய்ந்து, பலகணிவழியாய்ப் பார்க்கிறவர்கள் இருண்டு போகிறதற்குமுன்னும், எந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு, குருவியின் சத்தத்துக்கும் எழுந்திருக்க வேண்டியதாகி, கீதவாத்தியக் கன்னிகைகளெல்லாம் அடங்கிப் போகாததற்கு முன்னும், மேட்டுக்காக அச்சமுண்டாகி, வழியிலே பயங்கள் தோன்றி, வாதுமைமரம் பூப்பூத்து, வெட்டுக்கிளியும் பாரமாகி, பசித்தீபனமும் அற்றுப்போகாததற்கு முன்னும், மனுஷன் தன் நித்திய வீட்டுக்குப் போகிறதினாலே, துக்கங்கொண்டாடுகிறவர்கள் வீதியிலே திரியாததற்குமுன்னும், வெள்ளிக்கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி, இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு மறுபடியும் போகாததற்குமுன்னும், அவரை உன் வாலிபப் பிராயத்திலே நினை.

முதிர்வயதில், உணர்வுகள் மங்கிவிடுகின்றன. கைகள் (வீட்டுக் காவலாளிகள்) நடுங்கத் தொடங்குகின்றன, கால்கள் (பெலசாலிகள்) வளைந்து விடுகின்றன. பற்கள் (எந்திரம் அரைக்கிறவர்கள்) வெறுமனே நிற்கின்றன, கண்கள் (பலகணிகள்) மங்கலாகி விடுகின்றன. உடலானது மூளையின் அறிவுறுத்தலுக்கு ஒருகாலத்தில் செய்ததுபோல் பதில்செயல் செய்ய இயலாத அளவுக்கு வலுக்குறைந்து போகிறது. முதிர்வயதான மக்கள் தேவனுக்காக வாழ்வதைப் பற்றி நினைக்கையில் ஊக்கம் இழந்துபோகின் றனர். அவர்கள் தங்கள் இளம் வயதைத் தேவனின்றி வீணாக்கி விட்டதாகக் கண்டறிகின்றனர். அவர்கள் தேவனுக்குக் கொடுக்கத் தங்களிடம் அதிக நேரமோ அல்லது சக்தியோ எஞ்சியிருப்பதில்லை என்று அஞ்சுகின்றனர். அவர்கள் தேவனிடம் தங்களை மன்னிக்கும்படியும் தங்கள் முதிர்வயதில் தங்களை ஏற்றுக்கொள்ளும்படி அவரிடத்தில் கேட்டுக்கொள்வதும் சரியானதாய் இராது என்று நம்புகின்றனர். ஆனால் அது உண்மையல்ல. இளைஞரோ முதியவரோ, யாராயிருப்பினும் உண்மையாய் மனந்திரும்பி தேவனிடம் தங்களை ஒப்புவிக்கின்ற யாவரையும் மன்னித்து ஏற்றுக் கொள்ளவே தேவன் விரும்புகின்றார்.

முதிர்வயதான மனிதர் பற்றிய வார்த்தைச் சித்தரிப்பை சாலொமோன் தொடர்ந்தார். காதுகள் கேட்க இயலாத அளவுக்கு மந்தமாகின்றன (எந்திர சத்தம் தாழ்ந்ததினால் தெருவாசலின் கதவுகள் அடைபட்டு), இருப்பினும் வயதான ஒருவர், காலைவேலையில் ஒரு குருவியின் சத்தம்கூடத் தன்னை எழுப்பிவிடும் அளவுக்கு மிகவும் குறைவாகவே தூங்குகின்றார். குரலானது தனது இசைலயத்தை இழந்து போகிறது (கீதவாத்தியக் கன்னிகைகள் அடங்கிப்போகின்றனர்). மேட்டைக் கண்டு பயம் என்பது வயது ஏற ஏற அதிகமாகிறது. முடி நரைத்துப் போகிறது (வாதுமை மரம் பூப்பூத்து). அவரால் இனியும் கனத்த சுமைகளைத் தூக்க இயலாமற் போகிறது (வெட்டுக்கிளியும் பாரமாகி), மற்றும் அவரது உடல் ரீதியான விருப்பங்கள்

தவறுகின்றன (பசித்தீபனமும் அற்றுப்போகிறது). அவர் தமது நித்திய வீட்டிற்கு செல்லவேண்டிய நாள் விரைவில் வரும் என்றும் துக்கம் கொண்டாடுகின்றவர்கள் வீதியில் திரிவார்கள் என்றும் அறிகின்றார்.

12:6ல் மரணம் இரு உருவகங்களில் விவரிக்கப்படுகிறது: "வெள்ளிக் கயிறு கட்டுவிட்டு, பொற்கிண்ணி நசுங்கி, ஊற்றின் அருகே சால் உடைந்து, துரவண்டையில் உருளை நொறுங்கி.'' உயிரின் வெள்ளிக்கயிறு கட்டுவிடும்போது, விளக்கானது விழுந்து உடைந்து போகிறது. இன்னொரு உருவகத்தில், உருளை நொறுக்கப்படுகிறது, மற்றும் குடம் கிணற்றருகில் விடப்படுகிறது. உடலானது தான் உண்டாக்கப்பட்ட மண்ணுக்குத் திரும்புகிறது (ஆதி. 2:7), மற்றும் ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்குத் திரும்புகிறது (12:7, 8). தேவனுக்காக நாம் எதைச் செய்வதற்கு திட்டமிட்டாலும், அதை அந்தக் காலம் வரும்முன்பாகவே செய்யவேண்டும். நித்தியத்திற்காக நாம் எந்த ஆயத்தம் செய்தாலும் அவைகள் முன்னதாகவே செய்யப்பட வேண்டும். ஆயத்தத்தைப் புறக்கணிக்கிற வாழ்வானது கடைசிக் கணக்கொப்புவிப்பில் பயனற்றதும் வீணானதுமாக உள்ளது.

## சத்தியத்தை உணர்ந்து அறியுங்கள் (12:9-14)

பிரசங்கியாரான சாலொமோன், தமது போராட்டங்களின் மத்தியிலும் தமது ஞானத்தைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளக் கூடியவராக இருந்தார். அவர் தமது மக்களுக்குப் போதிப்பதற்குப் பல நீதிமொழிகளைத் தொகுத் தமைத்தார். சத்தியம் மற்றும் நீதி பற்றிய தமது வார்த்தைகளைச் செய்தித் தொடர்புபடுத்த அவர் சரியான வழியை ஆராய்ந்து பார்த்தார் (12:9, 10).

ஞானியின் வாக்கியங்கள் தாற்றுக்கோல்களைப் போல் மனச்சாட்சி யைக் குத்தி, செயல்பாட்டை ஊக்கப்படுத்துவதாக உள்ளன (12:11). தாற்றுக்கோல் என்பது கூர்மையான முனைகொண்ட ஒரு குச்சி அல்லது கோலாக இருந்தது, இது இளம் எருதைப் பழக்கப்படுத்தப் பயன்பட்டது. இந்த நீதிமொழிகள் இவற்றின் போதகர்களால் அறையப்பட்ட ஆணி களைப் போல் இருந்தன.

பின்பு சாலொமோன், தமது குமாரனுக்கு அவன் எதைக் கேள்விப்படுவான், எதில் போதிக்கப்படுவான் என்பவற்றை ஜாக்கிரதையாய் நிறுத்துப் பார்க்க வேண்டும் என்று புத்தி கூறினார் (12:12). அறிவுமிகுந்தவர்கள் என்று உரிமைகோரிக் கொண்டவர்களால் முடிவற்ற கருத்துக்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. அவற்றைப் படித்தலும், அவற்றில் எவை உண்மையானவைகளாய் இருக்கின்றன என்று முடிவு செய்தலும் களைப்பை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கக்கூடும், ஆனால் நமக்குப் போதிக்கப்பட்டவற்றை நாம் பரிசோதித்துப் பார்க்க வேண்டும். உண்மையைப் பற்றிக்கொண்டிராத எதுவும் ஞானமாக இருப்பதில்லை.

சாலொமோன் தமது எல்லா ஞானத்துடனும், பல ஆண்டு களாக,வாழ்வின் அர்த்தத்தைக் கண்டறிவதற்கு நாடினார். பிரசங்கி புத்தகத்தின் முடிவில் அவர், ''காரியத்தின் கடைத்தொகையைக்

*கேட்போமாக, தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே. ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும் தீமையானாலும், தேவன் நியாயத்திலே கொண்டுவருவார்'' என்று எழுதினார் (12:13, 14).*

## *முடிவுரை*

*சாலொமோனின் முடிவே நமது முடிவாகவும் இருக்க வேண்டும்: "தேவனுக்குப் பயந்து, அவர் கற்பனைகளைக் கைக்கொள்." அதுவே வாழ்வு பற்றிய எல்லாமுமாக உள்ளது! அவருக்காக நமது வாழ்வை வாழுதல் மற்றும் நியாயத்தீர்ப்புக்குத் தயாராக இருத்தல் என்பதே எல்லாவற்றிலும் ஞானமுள்ள வாழ்வோட்டமாக உள்ளது (மத். 25:31-46). நாம் செய்கின்ற எல்லாச் செயல்களுக்கும், அவைகள் இரகசியமானவைகளாக இருப்பினும், அவைகள் நல்லவைகளாக அல்லது தீயவைகளாக இருப்பினும், நாம் தேவனிடத்தில் கணக்கு ஒப்புவித்தாக வேண்டும். பவுல், ''தேவன் இயேசுகிறிஸ்துவைக் கொண்டு மனுஷருடைய அந்தரங்கங்களைக் குறித்து நியாயத்தீர்ப்புக் கொடுக்கும் நாளிலே" என்பது பற்றிப் பேசினார் (ரோம. 2:16). தேவனுக்குப் பயந்து அவரது கற்பனைகளைக் கைக்கொள்கின்றவர்கள், அந்த நாள் வரும்போது அகமகிழக் காரணம் கொண்டிருப்பார்கள் (1 பேது. 4:13).*